<u>ஆற்காடு நகராட்சி</u>

**2022** அக்டோபர் மாதம் **28**ஆம் நாள் **வெள்ளிக்கிழமை** பிற்பகல் **4.00** **மணிக்கு 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை 3ல் விதி 2(1) இன்படி** **சாதாரணக் கூட்டம்** ஆற்காடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள மன்ற அரங்கில் நடைபெறும்.

குறள் எண். 421) அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

**பொருள்.** இறுதிக்காலம் வரையும் காப்பாற்றும் கருவி அறிவு ஆகும்;
பகைவருக்கும் உட்புகுந்து அழிக்க இயலாத கோட்டையும் அந்த
அறிவு ஆகும்.

<u>**மன்றப்பொருள்**</u>

**பொருள் எண்.01)**

இந்நகராட்சி ஆணையாளர்(பொ) அவர்களின் செப்டம்பர்-2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.:- 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மான எண்**.270, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.02)**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர்-2022 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்**.271, பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.03)**

இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-2020 (ம) 2020-21ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாலாற்று பகுதி அருகில் பொதுப்பணித்துறை மூலம் நவீன வரிவாயு தகன மேடை கட்டிடம் கட்டப்பட்டு நகராட்சி வசம் தற்பொழுது ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி நவீன வரிவாயு தகனமேடையை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டியுள்ளதால் மாவட்ட சுற்றுசூழல் TNPCB, Vellore அவர்களின் அனுமதி பெறவேண்டியுள்ளதால் மாவட்ட சுற்றுசூழல் TNPCB, Vellore அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.56,800/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினதை பொதுநிதியில் இருந்து மேகொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட அனுமதி

கட்டணத்தொகை ரூ.56,800/- TNPCB, Vellore அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.272, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.04)** இந்நகரமன்ற தீர்மான எண்.253, நாள்.30.09.2022ல் அனுமதியளிக்கப்பட்டதின் படி ஆற்காடு நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு நகர பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகள் பயோமெட்டிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR code உடனான அடையாள அட்டை (ID card) தயாரித்து வழங்குதல், விற்பனை சான்றிதழ் (Certificate of vendors) நகர தெரு விற்பனை திட்டம் (CSVP) விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல் பணிகள் மேற்கொள்ள ஒரு நபருக்கு ரூ.905/-க்கு The Athens Charitable and Educational Trust நிறுவனத்தின் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 10.10.2022ம் தேதிய காணொலி ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி The Athens Charitable and Educational Trust நிறுவனத்திற்கு மேற்கண்ட பணிக்கு Negotiation விலைவிகிதம் குறைத்து தர 10.10.2022-ல் கடிதம் அனுப்பப்பட்டது.

அதனை தொடர்ந்து தற்போது வரப்பெற்றுள்ள The Athens Charitable and Educational Trust நிறுவனத்தின் Negotiation கடிதத்தின் படி ஒரு நபருக்கு ரூ.445/- என குறைத்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை ஏற்று, மேற்படி பணிகளை மேற்கொள்ள The Athens Charitable and Educational Trust நிறுவனத்திற்கு திருத்திய வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) தற்போது வரப்பெற்றுள்ள The Athens Charitable and Educational Trust நிறுவனத்தின் Negotiation கடிதத்தின் படி ஒரு நபருக்கு ரூ.445/- என குறைத்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விலைகிதத்தினை ஏற்று திருத்திய வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு திருத்திய வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.273, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.05)**

இந்நகராட்சிக்குட்பட்ட வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளுக்கும் நீர்சேகரிப்பு கிணறுகளுக்கும் இடையே இணைக்கப்பட்டுள்ள பைப்லைன் மற்றும் கேபிள்கள் வடகிழக்கு பருவமழை காரணமாக பாலாற்றில் ஏற்பட்ட அதிக வெள்ள பெருக்கினால் அடித்து செல்லப்பட்டதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வார்டுகள் 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு வாடகை லாரி மூலம் குடிநீர்

சப்ளை வழங்குதல் பணியினை நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதி திட்டத்தில் ரூ.10.00 லட்சம் செலவினத்தில் M/s.K.ராஜராம் & கோ ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்**.274, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.06)**

இந்நகராட்சிக்கு சொந்தமான வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கேலரி எண்.1ல் உள்ள Silt–ஐ தூர்வாரவும் மற்றும் சிதலமடைந்துள்ள மேல் கான்கீரிட் சிலாப்பினை சீரமைத்தல் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதியில் ரூ.4.40 லட்சம் செலவினத்தில் கேலரி எண்.1ல் உள்ள Silt–ஐ தூர்வாரவும் மற்றும் சிதலமைடந்துள்ள மேல் கான்கீரிட் சிலாப்பினை சீரமைத்தல் மற்றும் பழுது மராமத்து பணியினை M/s.K.ராஜராம் & கோ ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்**.275, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.07)**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 TNHB–1ல் உள்ள பகுதிகளில் பகீர்மான குழாயில் மரவேர்கள் நுழைந்து பழுதடைதுள்ளதால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்க இயலாத நிலை உள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதி திட்டத்தில் ரூ.3.85 லட்சம் செலவினத்தில் வார்டு 19 (TNHB–1ல்) உள்ள பகுதிகளில் பழுதடைந்துள்ள பகீர்மான குழாய் பைப்லைன் மாற்றி புதியதாக பகீர்மான குழாய் பைப்லைன் பதித்தல் மற்றும் OHT மற்றும் தெரு பகுதிகளில் வால்வுகள் புதிதாக பொருத்துதல் பணியினை M/s.K.ராஜராம் & கோ ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்**.276, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.08)**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 TNHB–1ல் தமிழக முதலமைச்சரின் சீரிய திட்டமான நகராட்சி தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றூண்டி வழங்கும் திட்டத்திற்காக கட்டப்பட்டுள்ள பொதுமான கமையலறை கட்டிடத்திற்கு செல்லும் பகுதிகளிலுள்ள சாலைகள் பழுதடைதுள்ளதால் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொது நிதி திட்டத்தில் ரூ.2.50 லட்சம் செலவினத்தில் வார்டு 19 (TNHB–1ல்) பழுதடைந்துள்ள சாலையில் WMM (Wet mix Macadam) பேட்ச் ஒர்க் செய்தல் பணியினை M/s.K.ராஜராம் & கோ ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்**.277, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.09)**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN 73AC 6459 என்ற இலகு ரக வாகனத்தினை 2022ஆம் வருடத்திற்கு வாகன தகுதி சான்று பெற வேண்டிவிலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் தோராயச் செலவினத் தொகை ரூ.30000.00–க்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) TN 73AC 6459 என்ற இலகு ரக வாகனத்தினை 2022ஆம் வருடத்திற்கு வாகன தகுதி சான்று பெற வேண்டி மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமைன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3) இச்செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.1611/2022/எச்1

**தீர்மான எண்**.278, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.10)**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN 73AC 6459 என்ற இலகு ரக வாகனத்தினை 2022ஆம் வருடத்திற்கு வாகன தகுதி சான்று பெற தோராயச் செலவினத் தொகை ரூ.30000.00–க்கு 23.09.2022ஆம் நாளில் நகர மன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெறப்பட்டு, விலைப்புள்ளி கோரப்பட்டதற்கு 03.10.2022ஆம் நாளில் கீழ் காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டமைக்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| Green world, Arcot | சங்கர் மெக்கானிக், ஆற்காடு | ஜெகன் டிங்கர், இராணிப்பேட்டை |
| 29900.00 | 31700.00 | 32300.00 |

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) TN 73AC 6459 என்ற இலகு ரக வாகனத்தினை 2022ஆம் வருடத்திற்கு வாகன தகுதி சான்று பெற வேண்டி விலைப்புள்ளி கோரப்பட்டதில் Green world, Arcot என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிக்கான உத்தரவு வழங்கி நடவடிக்கைகள்

3) மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1611/2022/எச்1

**தீர்மான எண்**.279, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.11)**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்த தூய்மைப் பணியாளரான திரு. தங்கமணி/ஜெயராமன் என்பவர் பணியிடையில் 24.12.2020ஆம் நாளில் மரணமடைந்தார். பணப்பயன்களுக்கு திரு. புவனேஷ் த/பெ. செல்வராஜ் என்பவரின் பெயரை வாரிசுதரராக நியமனம் செய்துள்ளார். மேலும், இறந்த பணியாளரின் மனைவியான திருமதி. மீனா என்பவர் தனக்கு பணப்பயன்கள் வழங்குமாறு கோரியதற்கு திரு. புவனேஷ் த/பெ. செல்வராஜ் என்பவர் திரு. A.G. Selvaraj வழக்கறிஞர் மூலம் தடை Notice அனுப்பட்டுள்ளது. எனவே, இதனை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.22143/2022 என்ற எண்ணில் திருமதி. மீனா என்பவர் வழக்கு தொடுத்துள்ளார். மேலும், இவ்வழக்கினை திரு. பி. ஆனந்த் சென்னை உயர் நிதி மன்ற வழக்கறிஞர் அவர்கள் மூலம் இந்நகராட்சியின் சார்பாக வாதுரை மேற்கொள்ள வேண்டி வழக்கு கட்டணமாக செலவினத் தொகை ரூ.15000/–யினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) திரு. தங்கமணி/ஜெயராமன், தூய்மைப் பணியாளரின் மனைவி திருமதி. மீனா என்பவர் சென்னை உயர் நிதி மன்றத்தில் வழக்கு தொடுத்தை இந்நகராட்சியின் சார்பாக திரு. ஆனந்த் வழக்கறிஞர் அவர்கள் மூலம் வாதுரை மேற்கொள்ள மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

01. வழக்கிற்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 224/2021/எச்1

**தீர்மான எண்**.280, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.12)**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73AB4824 என்ற Back hold loader வாகனத்தில் திடீர் பழுது ஏற்பட்டதால் இதனை நிவர்த்தி செய்ய வேண்டி உள்ளூர் பழுது நீக்குபவர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள தோரயாச் செலவினத் தொகை ரூ.16000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1)மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73AB4824 என்ற Back hold loader வாகனத்தில் திடீர் பழுது ஏற்பட்டதால் இதனை நிவர்த்தி செய்ய வேண்டி மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்து நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3) இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1730/2022/எச்1

**தீர்மான எண்**.281, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.13)**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73AB4824 என்ற Back hold loader வாகனத்தில் திடீர் பழுது ஏற்பட்டதினால் இதனை விலைப்புள்ளி பெற்று சரிசெய்ய தோராயச் செலவினத் தொகை ரூ.16000/-க்கு நகரமன்றத் தலைவர் அவர்களிடம் மன்றப்பொருளில் 03.10.2022ஆம் நாளில் முன் அனுமதி பெற்று 06.10.2022ஆம் நாளில் விலைப்புள்ளி கோரப்பட்டதற்கு, 14.10.2022ஆம் நாளில் பெறப்பட்ட கீழ் காணும் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| S. Rajeshkumar, Arcot | Annai engineering Spares, Vellore |
|---|---|
| 14930.00 | 16650.00 |

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள TN73AB4824 என்ற Back hold loader வாகனத்தில் திடீர் பழுது ஏற்பட்டதினால் இதனை உடனடியாக சரி செய்ய விலைப்புள்ளி

கோரப்பட்டதில் S. Rajeshkumar, Arcot என்பவரின் குறைவான விலைப்புள்ளி அளித்தமைக்கு மன்றபொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலைக்கான உத்தரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 1730/2022/எச்1

**தீர்மான எண்**.282, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**(ஒம்) பெ.தேவி**
**நகரமன்ற தலைவர்**
**ஆற்காடு நகராட்சி**

**/உண்மை நகல்/**

ஆணையாளர்(பொ)
ஆற்காடு நகராட்சி